www.kalvisolai.com

# அன்னை வேளாங்கண்ணி மாதா மேல்நிலைப்பள்ளி , பேராவூர்

## 12 ஆம் வகுப்பு தமிழ் ஒரு மதிப்பெண் வினா விடை (செய்யுள் பகுதி)

1. ஒன்றெயெனின் எனும் இறைவாழ்த்துப் பாடல் இடம் பெற்றுள்ள காண்டம் -**யுத்தக்காண்டம்**
2. வடமொழில் இராமாயணத்தை இயற்றியவர்-**வான்மீகி முனிவர்**
3. கம்பர் தம் காவிய நூலுக்கு இட்டப்பெயர்-**இராமாவதாரம்**
4. கம்பர் பிறந்த நாடு **-சோழ நாடு**
5. கம்பர் பிறந்த ஊர் -**திருவழுந்தூர்**
6. கவிச்சக்கரவர்த்தி எனப் போற்றப்படுபவர் - **கம்பர்**
7. விருத்தம் என்னும் ஒண்பாவில் புகழ்பெற்றவர் **- கம்பர்**
8. கம்பர் இயற்றிய மற்றொரு நூல் **-சரஸ்வதி அந்தாதி**
9. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் இருவர் - **ஔவையார், ஒட்டக்கூத்தர்**
10. கம்பரை ஆதரித்த வள்ளல் -**சடையப்ப வள்ளல்**
11. கம்பர் வாழ்ந்த காலம் - **கி.பி.12 ஆம் நூற்றாண்டு**
12. உமாமகேசுவரனார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வரதநஞ்சையப்பிள்ளை இயற்றிய நூல் - **தமிழரசி குறவஞ்சி**
13. சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை - **96**
14. குறவஞ்சி என்பது …….. வகையை சார்ந்தது. **-சிற்றிலக்கியம்**
15. தமிழரசி குறவஞ்சி பாட்டுடைத் தலைவன் - **முருகன்**
16. வரதநஞ்சையப்பிள்ளை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் பெற்ற சிறப்புப் பட்டம் - **ஆசிரியர்**
17. கற்றோரால் புலவரேறு என்று சிப்பிக்கப் பெற்றவர் - **வரதநஞ்சையப்பிள்ளை**
18. வரதநஞ்சையப்பிள்ளை நமச்சிவாய முதலியார் தலைமையில் பெற்ற பரிசு- **தங்கத்தோடா**
19. தமிழரசி குறவஞ்சி நூல் அரங்கேற்றத்திற்குத் தலைமையேற்றவர் - **ஞானியடிகள்**
20. வரதநஞ்சையப்பிள்ளையின் ஊர் - **தோரமங்கலம்**
21. வரதநஞ்சைப்பிள்ளையின் பெற்றோர் - **அப்பாசாமிப்பிள்ளை- வரதாயி**
22. உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்குப் பெற்ற கவிஞர் - **வெ.இராமலிங்கனார்**
23. நாக்கல் கவிஞருக்கு நடுவணரசு அளித்த விருது - **பத்மபூசன் விருது**
24. மாநில அரசின் அரசவைக் கவிஞராகவும் சட்ட மேலவை உறுப்பினராகவும் திகழ்ந்தவர் - **நாமக்கல் கவிஞர்**
25. நாமக்கல் கவிஞரின் ஊர் - **மோகனூர்**
26. வெ.இராமலிங்கனாரின் பெற்றோர்-**வெங்கட்ராமன் - அம்மணியம்மாள்**
27. சங்க இலக்கியங்கள்/ மேற்க்கணக்கு நூல்கள்-**பத்துப்பாட்டு, எட்டுத்தொகை**
28. புறப்பொருள் பற்றிய நூல்கள் - **பதிற்றுப்பத்து, புறநானூறு**
29. அகமும் புறமும் பற்றிய நூல் - **பரிபாடல்**
30. எட்டுத்தொகை நூல்களுல் ஒன்று- **பரிபாடல்**
31. சங்க நூல்கள் கீழ்க்கண்ட இலக்கண நூல்களுள் ஒன்றுக்கு இலக்கியங்களாய்த் திகழ்கின்றன - **தொல்காப்பியம்**
32. புறம், புறப்பாட்டு என வழங்கப்பெறுவது - **புறநானூறு**
33. புறநானூறு / நற்றினை / குறுந்தொகை / ஐங்குறு நூறு ஆகிய நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் - **பாரதம் பாடிய பெருந்தேவனார்**
34. புறநானூற்றிலுள்ள திணைகளின் எண்ணிக்கை - **11**
35. புறநானூற்றிலுள்ள துறைகளின் எண்ணிக்கை - **65**
36. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல் - **புறநானூறு**
37. புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்த வெளிநாட்டறிஞர்**ஜி.யு.போப்**
38. வெட்சி, வஞ்சி முதலிய புறத்திணைகளில் கூறப்படாத செய்திகளைக் கூறுவது –**பொதுவியல்திணை**
39. முனிவர் கண்ட பொருள் இது என்று உணர்த்துவது –**பொருண்மொழிக்காஞ்சி**
40. தமிழிலக்கணத்தின் பிரிவுகள் - **5**
41. பொருளிலக்கண வகை - **2**
42. திணைகளின் உட்பிரிவு - **துறை**
43. ‘‘நல்லது செய்த லாற்றீ ராயினும் / அல்லது செய்யே ஓம்புமின்’’ என்று பாடியவர் -**நரிவெரூஉத்தலையார்**
44. நெடுந்தொகை –**அகநானூறு**
45. அகநானூற்றுப் பாக்களின் அடிவரையறை - **13 அடி முதல் 31 அடி வரை**
46. அகநானூற்றைத் தொகுத்தவர் - **மதுரை உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திரசன்மன்**
47. அகநானூற்றைத் தொகுப்பித்தவன் **- பாண்டியன் உக்கிரப் பெருவழுதி**
48. அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் **- பெருந்தேவனார்**

www.kalvisolai.com

49. அகநானூற்றின் பகுதிகள் **- 3**
50. களிற்றியானை நிரையில் அமைந்துள்ள பாடல்கள் - **1 முதல் 120 வரை**
51. மணிமிடை பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை –**180**
52. நித்திலக்கோவையில் உள்ள பாடல்கள் - **100**
53. அகநானூற்றில் 1,3 என ஒற்றைப்படை எண்களாக வரும் பாடல்கள் - **பாலைத்திணைக்கு உரியன**
54. 2,8 என வரும் அகநானூற்றப் பாடல்கள் - **குறிஞ்சி**
55. 4,14 என வரும் அகநானூற்றுப் பாடல்கள் - **முல்லை**
56. 6,16 என்னும் முறைப்பற்றி வரும் அகநானூற்றுச் செய்யுள்கள் **- மருதம்**
57. 10,20 என்னும் முறையில் வரும் அகநானூற்றுப் பாக்கள் - **நெய்தல்**
58. பாடப் பகுதியில் உள்ள முல்லைத் திணைப் பாடல் இடம்பெற்றப் பகுதி –**மணிமிடை பவளம்**
59. முதற்பொருள் என்பது –**நிலமும் பொழுதும்**
60. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக அமையப்பெற்றது **– நற்றிணை**
61. நற்றிணைப் பாக்களின் அடிவரையறை **– 9 அடி முதல் 12 அடி வரை**
62. நற்றிணையை தொகுப்பித்தவர் - **பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி**
63. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று **– குறுந்தொகை**
64. குறுந்தொகையின் அடியளவு - **4 அடி முதல் 8 அடி வரை**
65. குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை –**402**
66. கபிலரை 'வாய்மொழிக் கபிலர்' என்று போற்றியவர் - **நக்கீரர்**
67. கபிலரின் நெருங்கிய நண்பர் **-பாரி**
68. கபிலர் பிறந்த நாடு –**பாண்டிய நாடு**
69. கபிலர் பிறந்த ஊர் **-திருவாதவூர்**
70. குறிஞ்சித் திணையைப் பாடுவதில் வல்லவர் - **கபிலர்**
71. பாரியின் அவைக்களப் புலவர் **-கபிலர்**
72. நல்லிசைக் கபிலன் என்றவர் - **பெருங்குன்றூர்க் கிழார்**
73. 'வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்' எனப் போற்றியவர் **-பொருந்தில் இளங்கிரனார்**
74. புலனழுக்கற்ற அந்தாளன், பொய்யா நாவிற்கபிலன் எனப் புகழ்ந்தவர் **-மாறோக்கத்து நப்பசலையார்**
75. ஐங்குறு நூற்றில் உள்ள ஒவ்வொரு திணைகளிலும் உள்ள பாடல்களின் எண்ணிக்கை **-100**
76. ஐங்குறு நூற்றுப் பாடல்களின் அடி வரையறை **– 3 முதல் 6 வரை**
77. ஐங்குறு நூறு நூலைத் தொகுத்தவர் - **கூடலூர்கிழார்**
78. ஐங்குறு நூறு நூலைத் தொகுப்பித்தர் - **யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை**
79. ஐங்குறு நூற்றில் முல்லைத் திணையைப் பாடியவர் - **பேயனார்**
80. ஐங்குறு நூற்றில் நெய்தல் திணையைப் பாடியவர் - **அம்மூவனார்**
81. ஐங்குறு நூற்றில் குறிஞ்சித் திணையைப் பாடியவர் - **கபிலர்**
82. ஐங்குறு நூற்றில் மருதத் திணைப் பாடல்களைப் பாடியவர் - **ஓரம்போகியார்**
83. ஐங்குறு நூற்றில் பாலைத் திணைப் பாடல்களைப் பாடியவர் - **ஓதலாந்தையார்**
84. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று –**திருக்குறள்**
85. குறட்பா என்பது **– ஈரடி வெண்பா**
86. முதற்பாவலர் - **திருவள்ளுவர்**
87. முப்பால் எனும் பெயரைப் பெற்றது –**திருக்குறள்**
88. திருக்குறளின் மொத்த அதிகாரங்கள் - **133**
89. அறத்துப்பாலின் அதிகாரங்கள் - **38**
90. பொருட்பாலின் அதிகாரங்கள் - **70**
91. இன்பத்துப்பாலின் அதிகாரங்கள் **-25**
92. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள் **- 9**
93. அறத்துப்பாலின் இயல்கள் - **பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழ்வியல்**
94. பொருட்பாலின் இயல்கள் - **அரசியல், அங்கவியல், ஒழிபியல்**
95. காமத்துப்பாலின் இயல்கள் - **களவியல், கற்பியல்**
96. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது –**திருவள்ளுவ மாலை**
97. "வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே" எனப் பாடியவர் - **பாரதிதாசன்**
98. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் பாடியவர் - **பாரதியார்**
99. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி – இதில் இரண்டு என்பது குறிக்கும் நூல் - **திருக்குறள்**
100. திருவள்ளுவராண்டு கணிக்கப்பட்ட காலம் - **கி.மு. 31**
101. ஐம்பெருங்காப்பியங்களுள் தலையாயது –**சிலப்பதிகாரம்**
102. இரட்டைக் காப்பியம் - **சிலப்பதிகாரம், மணிமேகலை**

103.உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் - **சிலப்பதிகாரம்**

104. சிலப்பதிகாரத்திலுள்ள காண்டங்கள் - **மூன்று**

105.சிலப்பதிகாரத்தில் உள்ள காதைகளின் எண்ணிக்கை –**முப்பது**

106.சிலப்பதிகாரம் தோன்றிய காலம் - **கி.பி. இரண்டாம் நூற்றாண்டு**

107. சிலப்பதிகார உரையாசிரியர்களுள் ஒருவர் - **அரும்பத உரைகாரர்**

108.சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு - **காதை**

109.நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் எனப் புகழ்ந்தவர் - **பாரதியார்**

110.“தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவைதேறும் சிலப்பதிகாரம்” என்று பாடியவர் **-கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை**

111. வரி என்பது……… வகையது**. – இசைப் பாடல்**

112.“முடிகெழு வேந்தர் மூவர்க்கும்உரியது: அடிகள் நீரே அருளுக”–என்று வேண்டிக்கொண்டவர் - **சீத்தலைச் சாத்தனார்**

113.“நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்” என்றவர் - **இளங்கோவடிகள்**

114.சிலப்பதிகாரம் முழுமைக்கும் விளக்கமான உரை நூல் எழுதியவர் - **ந.மு. வெங்கடசாமி நாட்டார்**

115.கம்ப நாடகத்தின் யாப்பு வண்ணங்களுக்குக் கூறப்படும் கணக்கீடு –**தொண்ணூற்றாறு**

116.கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்களின் எண்ணிக்கை –**ஆறு**

117.உத்தர காண்டத்தை இயற்றியவர் - **ஒட்டக்கூத்தர்**

118.சுந்தரகாண்டம் இராமாயணத்தில் - **ஐந்தாவது காண்டம்**

119.சுந்தரன் என்னும் பெயரால் இராமாயணத்தில் வழங்கப்படுபவர் - **அனுமன்**

120.சிறிய திருவடி என்றழைக்கப்படுபவர் - **அனுமன்**

121.தனயை என்ற சொல்லின் பொருள் - **மகள்**

122.இராமன் கொடுத்ததாகச் சீதையிடம் அனுமன் காட்டியது –**கணையாழி**

123.சீதைப்பிராட்டி தன்னை மீட்டுச்செல்ல வேண்டி விதித்த காலம் - **ஒரு திங்கள்**

124.கம்பராமாயணத்தின் உட்பிரிவு - **படலம்**

125.கம்பராமாயணம் எத்தகைய நூல் - **வழி நூல்**

126.ஆதிகவி –**வான்மீகி**

127. திருவடி தொழுத படலம் இடம்பெற்றுள்ள காண்டம் - **சுந்தரகாண்டம்**

128.இராம காதைக்கு வேறு பெயர் - **ஆதிகாவியம்**

129. ஜோசப் பெஸ்கி, தைரியநாதசாமி என்று அழைக்கப்படுபவர் - **வீரமாமுனிவர்**

130.வீரமாமுனிவர் இயற்றிய காப்பியம் - **தேம்பாவணி**

131.தேம்பாவணியில் இடம்பெற்றுள்ள காண்டங்கள் - **மூன்று**

132.தேம்பாவணியில் உள்ள படலங்கள் **-36**

133.தேம்பாவணியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை –**3615**

134.தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவன் - **சூசை முனிவர்**

135.கிறித்தவர்களின் கலைக் களஞ்சியம் - **தேம்பாவணி**

136.வீரமாமுனிவரின் தாய் நாடு –**இத்தாலி**

137.கொன்ஸ்டான் என்னுஞ்சொல்லுக்குப் பொருள் - **அஞ்சாதவன்**

138.வீரமாமுனிவர் சமயப்பணியும், தமிழ்ப் பணியும் புரிந்த ஆண்டுகள் **- 37**

139.வீரமாமுனிவர் இயற்கை எய்திய இடம் - **அம்பலக்காடு**

140.வீரமாமுனிவர் தொகுத்த அகராதி **– சதுகரகரதி**

141.திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றை வீரமாமுனிவர் மொழிப்பெயர்த்துத் தந்தது –**இலத்தீன் மொழியில்**

142.வளன் என்னும் பெயர் எச்சொல்லின் தமிழாக்கம் - **ஜோசப்(சூசை)**

143.கொன்ஸ்டான் ஜோசப் பெஸ்கி என்னும் இயற்பெயருடையவர் - **வீரமாமுனிவர்**

144.பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய காப்பியம் - **பாண்டியன் பரிசு**

145.பாரதிதாசனின் இயற்பெயர் - **சுப்புரத்தினம்**

146.புரட்சிக் கவிஞர் - **பாரதிதாசன்**

147.இரசூல் கம்சதோவ் என்ற உருசியக் கவிஞருடன் ஒப்பு நோக்கத்தக்கவர் - **பாரதிதாசன்**

148.சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்ற பாரதிதாசனின் நாடக நூல் - **பிசிராந்தையார்**

149.புதுவை அரசு ஏற்றக்கொண்டுள்ள “வாழ்வினிற் செம்மையைச் செய்பவள் நீயே” என்ற தமிழ் வாழ்த்துப்பாடலை இயற்றியவர்- **பாரதிதாசன்**

150.பாரதிதாசன் வெளியிட்ட இலக்கிய இதழ் - **குயில்**

151.தொண்டு செய்வாய் தமிழுக்குத் / துறைதோறுந் துறைதோறுந் / துடித்தெழுந்தே – எனப் பாடிய கவிஞர் **- பாரதிதாசன்**

www.kalvisolai.com

152.என்னருந் தமிழ் நாட்டின்கண் எல்லாருங் கல்வி கற்க வேண்டும் என விழைந்தவர் - **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்**

153. ஸ்ரீசுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சார்ந்தவர் என்று பாரதியால் குறிக்கப்பெற்றவர் **- பாரதிதாசன்**

154.தேனோக்கும் செந்தமிழே! நீ கனி!நான் கிளி! என்று பாடியவர் - **பாரதிதாசன்**

155.செந்தமிழைச் செழுந்தமிழாக்க காண விரும்பியவர் - **பாரதிதாசன்**

156.பிரபந்தம் என்னும் வடச் சொல் உணர்த்தும் பொருள் - **நன்கு கட்டப்பட்டது**

157.சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை விளக்கிக்கூறும் நூல் - **பாட்டியல் நூல்கள்**

158.பிரபந்தம் தொண்ணுற்றாறு என்று கூறிப் பெயர்களை வகைப்படுத்தியவர் - **வீரமாமுனிவர்**

159.உலா என்பது - **சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று**

160.உலா (உலாப்புறம்) என்பது –**கலிவெண்பாவால் இயற்றப்படுவது**

161.பவனிவரல் என்பது எச்சொல்லுக்குரிய பொருள் - **உலா**

162. இராசராச சோழன் உலாவைப் பாடியவர் - **ஒட்டக்கூத்தர்**

163. கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன் என்றெல்லாம் புகழப்படுபவர் - **ஒட்டக்கூத்தர்**

164. பந்தயம் வைத்துப்பாடுவதில் வல்லவர் - **ஒட்டக்கூத்தர்**

165. ஒட்டக்கூத்தரின்காலம் - **கி.பி.12 ஆம் நூற்றாண்டு**

166. அந்தம் என்ற சொல்லுக்குப் பொருள் - **இறுதி**

167.சொற்றொடர் நிலை எனப்படுவது –**அந்தாதி**

168. அழகிய மனவாளதாசர் / திவ்விய கவி என்றெல்லாம் அழைக்கப்படுபவர் - **பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்**

169. அஷ்டபிரபந்தம் இயற்றியவர் - **பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்**

170. பதினெட்டு உறுப்புகள் அமையப்பாடுவது –**கலம்பகம்**

171. கதம்பம் என்பது கலம்பகம் என்று திரிந்ததாகக் கருதுபவர் - **உ.வே.சாமிநாத ஐயர்**

172. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம் - **நந்திக்கலம்பகம்**

173. குமரகுருபரர் செய்யுட்களின் தனிச் சிறப்பு - **இன்னோசை**

174. தமிழையும் தெய்வத்தையும் இரு கண்களாக கொண்டு வாழ்ந்தத் துறவி –**குமரகுருபரர்**

175. சிற்றிலக்கிய வகைகளில் மிகப் புகழ்பெற்றது **– தூது**

176. மேக சந்தேசம் என்ற உலகப் புகழ்பெற்ற நூலை இயற்றியவர் - **காளிதாசர்**

177. புலன் என்னும் இலக்கிய வகை –**பள்ளு**

178. உழவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுவைப்பெறச் சொல்லும் சிற்றிலக்கியம் - **பள்ளு**

179. முக்கூடற் பள்ளுக்குறிய பாவகை –**சிந்துப்பா**

180. சிந்தும் விருத்தமும பரவி வர பாடப் பெறுவது –**பள்ளு**

181. மறுமலர்ச்சிப் பாடல்களின் உயிர்நாடி **– மானுடம்பாடும் நெறி**

182. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் - **பாரதியார்**

183. முப்பெரும் பாடல்களுள் ஒன்று –**பாஞ்சாலி சபதம்**

184. வடமொழியில் பாரதம் பாடியவர் - **வியாசர்**

185. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை **– 5**

186. பாஞ்சாலி துரியாதனனின் சபையில் செய்த சூளுரையை மையமாக் கொண்டது –**பாஞ்சாலி சபதம்**

187. பாஞ்சாலி சபதத்தின் பின்புலம் - **இந்திய விடுதலைப் போராட்டம்**

188. ''நமக்கு தொழில் கவிதை நாட்டிற்க்கு உழைத்தல்'' என்று பாடியவர் - **பாரதியார்**

189. ''தெருவெல்லாம் தமிழ் முழுக்கம் செழிக்கச் செய்வீர்''–''சொல்லில் உயர்வு தாழ்வு தமிழ்ச் சொல்லே'' என்றெல்லாம் பாடியவர் - **பாரதியார்**

190. பாரதியார் பிறந்த ஊர் - **எட்டயபுரம்**

191. ஞானரதம், தராசு முதலான உரைநடை இலக்கியங்களையும் படைத்தவர் - **பாரதியார்**

192. வாணிதாசன் சார்ந்த பரம்பரை–**பாரதிதாசன் பரம்பரை**

193. வாணிதாசனின் இயற்பெயர் - **அரங்கசாமி (எத்திராசலு)**

194. பிரஞ்சுக் குடியரசுத் தலைவரால் செவாலியர் விருதினைப் பெற்றவர் - **வாணிதாசன்**

195. கவிஞரேறு, பாவலர், பாவலர்மணி முதலிய பட்டங்களைப் பெற்றவர் - **வாணிதாசன்**

196. வாணிதாசனின் கவிதை நூல்கள் - **எழிலோவியம்**

197. தமிழகத்தின் வேர்ட்ஸ்வர்த் எனப் பாராட்டப்படுபவர் - **வாணிதாசன்**

198. பாக்களிலே பல சொல்லாய்வுகளுக்கு வித்திட்ட உவமைக் கவிஞர் - **சுரதா**

199. பாரதிதாசனின் தலை மாணாக்கர் - **சுரதா**

200. சுரதாவின் இயற்பெயர் - **இராஜகோபாலன்**

201. சுரதா நூல்களுள் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்ற நூல் - **தேன்மழை**

202. தமிழ்நாடு இயலிசை நாடகமன்றத்தால் கலைமாமணி பட்டம் வழங்கப்பட்டவர் **-சுரதா**

www.kalvisolai.com

203. தமிழக அரசு வழங்கிய பாவேந்தர் நினைவுப் பரிசினைப் பெற்ற முதற்பாவலர் - **சுரதா**
204. நல்ல உலகம் நாளை மலரும் என்ற கவிதைத் தொகுப்பினை அளித்தவர்- **கோ.மோகனரங்கன்**
205. தமிழக அரசின் பரிசினைப் பெற்ற ஆலந்தூர் கோ.மோகனரங்கனின் கவிதைத் தொகுப்பு - **இமயம் எங்கள் காலடியில்**
206. நல்லாசிரியருக்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்றவர் - **தாராபாரதி**
207. தாரா பாரதியின் கவிதை நூல்களுள் ஒன்று –**இது எங்கள் கிழக்கு**
208. மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர், புதுக்கவிதையில் மலர் பார்த்தவர் - **அப்துல் ரகுமான்**
209. கவிக்கோ அப்துல் ரகுமானின் நூல்களுள் ஒன்று –**சுட்டு விரல்**
210. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருது பெற்றவர் - **அப்துல் ரகுமான்**
211. தேவார மூவருள் ஒருவர் - **சுந்தரர்**
212. சுந்தரர் தேவாரம் - **ஏழாந்திருமறை**
213. சுந்தரர் பிறந்த நாடு – **திருமுனைப்பாடி நாடு**
214. சுந்தரர் பிறந்த ஊர் - **திருநாவலூர்**
215. சுந்தரரின் பிள்ளைத் திருப்பெயர் - **நம்பியாரூரர்**
216. தம்பிரான் தோழர் - **சுந்தரர்**
217. சுந்தரர் எழுதிய மற்றொரு நூல் - **திருத்தொண்டைத் தொகை**
218. சுந்தரர் காலம் - **கி.பி.9**
219. ஆழ்வார்கள் பன்னிருவரால் அருளப்பட்டது –**நாலாயிரதிவ்வியப் பிரபந்தம்**
220. திவ்வியப் பிரபந்தத்திற்கு உரை வழங்கியவர் - **பெரிவாச்சான் பிள்ளை**
221. குலசேகர ஆழ்வார் பாடல்கள் - **பெருமாள் திருமொழி**
222. திருவாய்மொழிக்கு ஆழமும் அகலமும் உடைய ஈடு என்னும் பேருரை எழுதியவர் - **வடக்கு திருவீதிப் பிள்ளை**
223. மணிமேகலை– காதைகளின் எண்ணிக்கை –**30**
224. மணிமேகலை (மணிமேகலை துறவு) –**புத்த சமய காப்பியம்**
225. சீவக சிந்தாமணிக்கு கவிதை சுவை மிக்க நூல் - **நீலகேசி (நீலகேசித் திரட்டு)**
226. ஜான்பனியன் என்பவர் எழுதிய பில்கிரிம்ஸ் பிராகிரஸ் என்ற நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல் - **இரட்சணிய யாத்திரிகம்**
227. கிறித்தவக் கம்பர் - **எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை**
228. இரட்சணிய யாத்திரிகத்துள் இடையிடையே அமைந்த இசைப் பாடல்களின் பெயர் - **தேவாரம்**
229. உமறுபுலவர் இயற்றிய பெருங்காப்பியம் - **சீறாபுராணம்**
230. கடிகை முத்துப் புலவரின் மாணவர் - **உமறுபுலவர்**
231. உமறுபுலவர் சீறாபுராணம் எழுத துணைபுரிந்த வள்ளல்கள் - **வள்ளல் சீதாகாதி, அபுல் காசிம்**
232. சின்னச் சீறா என்ற நூலை எழுதியவர் - **பனு அகமது மரைக்காயர்**
233. உமறுபுலவர் எழுதிய மற்றொரு நூல் - **முதுமொழிமாலை**

**பொருத்துதல்**

1. **கவிஞர்** — **ஊர்**

| கவிஞர் | | ஊர் |
|---|---|---|
| கம்பர் | - | திருவழுந்தூர் |
| வரதநஞ்சையப்பிள்ளை | - | தோரமங்களம் |
| வே.இராமலிங்கனார் | - | மோகனூர் |

2. **சொல்** — **இலக்கணக்குறிப்பு**

| சொல் | | இலக்கணக்குறிப்பு |
|---|---|---|
| அடி வாழ்த்துவம் | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| வாழியவாழிய | - | அடுக்குத்தொடர் |
| வாழ்த்துவம் | - | தன்மைப் பன்மை வினைமுற்று |

3. **ஆசிரியர்** — **நூல்**

| ஆசிரியர் | | நூல் |
|---|---|---|
| கம்பர் | - | இராமாயணம் |
| வரதநஞ்சையப்பிள்ளை | - | தமிழரசி குறவஞ்சி |
| இராமலிங்கனார் | - | நாமக்கல் கவிஞர் பாடல்கள் |

4. **சொல்** — **இலக்கணக்குறிப்பு**

| சொல் | | இலக்கணக்குறிப்பு |
|---|---|---|
| முள்ளிலை | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| ஒழுகுநீர் | - | வினைத்தொகை |
| நன்மான் | - | பண்புத்தொகை |
| அஞ்சிலோதியை வர | - | அன்மொழித்தொகை |

www.kalvisolai.com

5. **சொல்** — **பொருள்**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| தினை | - | மிகச்சிறிய அளவு |
| பனை | - | ஒரு பேரளவு |
| சால்பு | - | நிறைபண்பு |
| துப்பு | - | பற்றுக்கோடு |

6. **சொல்** — **பொருள்**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| மடவார் | - | அறிவிலிகள் |
| ஒரால் | - | நீக்குதல் |
| பொன்றும் | - | அழியும் |
| விருந்து | - | புதியதாய் வந்தவர் |

7. **சொல்** — **பொருள்**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| செறுவார் | - | பகைவார் |
| ஒட்பம் | - | அறிவுடைமை |
| உய்பது | - | செலுத்துவது |
| பேதைமை | - | அறிவு இன்மை |

8. **சொல்** — **பொருள்**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| ஒல்காமை | - | தளராமை |
| விழுமம் | - | துன்பம் |
| திண்ணியர் | - | வலியர் |
| வீறு | - | சிறப்பு |

9. **புலவர்கள்** — **இயற்றிய நூல்கள்**

| புலவர்கள் | | இயற்றிய நூல்கள் |
|---|---|---|
| இளங்கோவடிகள் | - | சிலப்பதிகாரம் |
| திருத்தக்கதேவர் | - | சிவகசிந்தாமணி |
| நாதகுத்தனார் | - | குண்டலகேசி |
| சீத்தலைசாத்தனார் | - | மணிமேகலை |

10. **நூல்** — **ஆசிரியர்**

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| இராசராச சோழனுலா | - | ஒட்டக்கூத்தர் |
| திருவேங்கடத்தாதந்தாதி | - | பிள்ளைப் பெருமாள் ஐங்கார் |
| மதுரைக்கலம்பகம் | - | குமரகுருபரர் |
| முக்கூடற்பள்ளு | - | ஆசிரியர் பெயர் தெரியவில்லை |

11. **நூல்** — **ஆசிரியர்**

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| குயில்பாட்டு | - | பாரதியார் |
| அழகின் சிரிப்பு | - | பாரதிதாசன் |
| துறைமுகம் | - | சுரதா |
| பால் வீதி | - | அப்துல் ரகுமான் |

12. பாடல்கள் — **கவிஞர்கள்**

| பாடல்கள் | | கவிஞர்கள் |
|---|---|---|
| புத்தகச்சாலை | - | பாரதிதாசன் |
| தீக்குச்சிகள் | - | அப்துல் ரகுமான் |
| சிக்கனம் | - | சுரதா |
| காடு | - | வாணிதாசன் |

13. **சொல்** — **பொருள்**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| சுவடி | - | நூல் |
| வெய்யோன் | - | கதிரவன் |
| செட்டு | - | சிக்கனம் |
| சிந்தை | - | உள்ளம் |

14. **நூல்** — **ஆசிரியர்**

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| மணிமேகலை | - | சீத்தலை சாத்தனார் |
| தேவாரம் | - | சுந்தரர் |
| சீறாப்புராணம் | - | உமறுப் புலவர் |
| இரட்சணிய யாத்திரிகம் | - | கிருட்டிணப்பிள்ளை |

www.kalvisolai.com

| | | |
|---|---|---|
| **15. நூல்** | | **சமயம்** |
| மணிமேகலை | - | பௌத்தம் |
| நீலகேசி | - | சமணம் |
| இரட்சணிய யாத்திரிகம் | - | கிறித்துவம் |
| சீறாப்புராணம் | - | இஸ்லாம் |
| **16. திணை** | | **தெய்வம்** |
| குறிஞ்சி | - | முருகன் |
| முல்லை | - | திருமால் |
| மருதம் | - | இந்திரன் |
| நெய்தல் | - | வருணன் |
| **17. திணை** | | **மாந்தர்** |
| குறிஞ்சி | - | குறத்தியர் |
| முல்லை | - | ஆயர், ஆய்ச்சியர் |
| மருதம் | - | கடைசியர் |
| நெய்தல் | - | துச்சியர் |
| பாலை | - | கயிற்றியர் |
| **18. திணை** | | **தொழில்** |
| குறிஞ்சி | - | தேனெடுத்தல் |
| முல்லை | - | காளை தழுவுதல் |
| மருதம் | - | களைப்பறித்தல் |
| நெய்தல் | - | உப்பு விற்றல் |
| **19. திணை** | | **உரிபொருள்** |
| குறிஞ்சி | - | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | - | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | - | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | - | இரங்கலும் இரங்கள் நிமித்தமும் |
| பாலை | - | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |
| **20. திணை** | | **நிலம்** |
| குறிஞ்சி | - | மலையும் மலை சார்ந்த இடமும் |
| முல்லை | - | காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | - | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | - | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| **21. திணை** | | **பாடியோர்** |
| குறிஞ்சி | - | கபிலர் |
| முல்லை | - | பேயனார் |
| மருதம் | - | ஓரம்போகியார் |
| நெய்தல் | - | அம்மூவனார் |
| பாலை | - | ஓதலாந்தையார் |
| **22. திணை** | | **உணவு** |
| குறிஞ்சி | - | மலைநெல், தினை, மூங்கிலரிசி |
| முல்லை | - | வரகு, சாமை, முதிரை |
| மருதம் | - | செந்நெல், வெண்ணெலரிசி |
| நெய்தல் | - | மீனும், உப்பு விற்றலால் பெறும் பொருள் |
| பாலை | - | வழிப்பறி செய்து கொள்ளையடித்த பொருள் |

தொகுத்து வழங்கியவர் :திரு. ஆ. ஜெஸ்டின்,M.A.,B.Ed.,தமிழாசிரியர்
**அன்னை வேளாங்கண்ணி மாதா மேல்நிலைப்பள்ளி, 88. பேராவூர், நாகை மாவட்டம்-612 203**